தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சின்ன வெங்காயம் விலை அதிகரிக்க வாய்ப்பு குறைவு

சின்ன வெங்காயத்தின் தாயகம் மத்திய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளாகும். இவை தென்னிந்திய சமையலில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய காய்கறி பயிராகும். தமிழ்நாடு, கர்நாடக ரமற்றும் ஆந்திரபிரதேசம் ஆகியவை சின்ன வெங்காயம் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், தேனி, மதுரை, ஆகிய மாவட்டங்களில் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சின்ன வெங்காயம் உற்பத்தியில் அதிக பங்கு உள்நாட்டு நுகர்வுக்கே பயன்படுவதால் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தேவைக்கு கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசத்திலிருந்து சின்ன வெங்காயம் தமிழகத்திற்கு கொண்டு வரப்படுகிறது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் முக்கிய இறக்குமதி நாடுகளாகும். வணிக வர்த்தகர்கள்அதிகவரத்தை சேமித்து வைத்து சந்தை நிலவரத்திற்கு தக்கவாறு விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளனர்.

சரியான நேரத்தில் போதிய மழை மற்றும் விளைச்சல் காரணமாக சின்ன வெங்காயம் உற்பத்தி, தமிழகத்தில் அதிகமாக இருப்பதால் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை. இலங்கையிலும் சின்ன வெங்காயம் விளைவிக்கப்படுவதால் நடப்பு பருவத்தில் ஏற்றுமதி குறைந்துள்ளது என வணிக தரப்பினர் கூறியுள்ளனர். கோடை மழையின் வரவை எதிர்பார்த்து, விதைப்பு சின்ன வெங்காயத்தின் தேவையானது விலையில் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை மே - ஜீன், 2016 மாதங்களில் கிலோவிற்கு ரூ.21 – 23 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின் படி சின்ன வெங்காயத்தை விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>


*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*<br>
*வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,*<br>
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*<br>
*கோயமுத்தூர் - 641 003.*<br>
*தொலைபேசி: 0422-2431405*


<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>


*பேராசிரியர் மற்றும் தலைவர்,*<br>
*காய்கறிப் பயிர்கள் துறை,*<br>
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*<br>
*கோயம்புத்தூர் - 641 003.*<br>
*தொலைபேசி எண்:- 0422-6611374 / 6611283*


உதவி மக்கள் தொடர்பு அலுவலர்